DAILY THANTHI
Dated: 08.12.2024

மராட்டிய சட்டசபையில்

# எதிர்க்கட்சி எம்.எல்.ஏ.க்கள் பதவி ஏற்க மறுப்பு

## வாக்குப்பதிவு எந்திரத்தில் முறைகேடு நடந்ததாக குற்றச்சாட்டு

மும்பை, டிச.8-
மராட்டிய சட்டசபையில் எதிர்க்கட்சி எம்.எல்.ஏ.க்கள் பதவி ஏற்க மறுத்தனர். வாக்குப்பதிவு எந்திரத்தில் முறைகேடு செய்து ஆளும் கட்சியினர் தேர்தலில் வெற்றிபெற்றதாக அவர்கள் குற்றம் சாட்டினர்.



சட்டசபை கூட்டத்துக்கு வந்தபோது நேருக்கு நேர் சந்தித்து கொண்ட எதிரும், புதிருமான தலைவர்கள் முதல்–மந்திரி தேவேந்திர பட்னாவிஸ் மற்றும் உத்தவ் சிவசேனாவை சேர்ந்த முன்னாள் மந்திரி ஆதித்ய தாக்கரேயை படத்தில் காணலாம்.

### சட்டசபை கூட்டம்

மராட்டிய சட்டசபை தேர்தலில் பா.ஜனதா தலைமையிலான மகாயுதி கூட்டணி மிகப்பெரிய வெற்றி பெற்றதை அடுத்து கடந்த 5-ந்தேதி தேவேந்திர பட்னாவிஸ் முதல்-மந்திரியாகவும், ஏக்நாத் ஷிண்டே, அஜித்பவார் ஆகியோர் துணை முதல்-மந்திரிகளாகவும் பதவியேற்றனர்.

இதைதொடர்ந்து 15-வது சட்டசபையின் முதலாவது சிறப்பு கூட்டத்தொடர் நேற்று தொடங்கியது. சட்டசபைக்கு மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட்ட மற்றும் புதுமுக எம்.எல்.ஏ.க்கள் உற்சாகமாக வந்தனர்.

காலை 11 மணிக்கு அவை நடவடிக்கைகள் தொடங்கியவுடன், தற்காலிக சபாநாயகரான காளிதாஸ் கோலம்கர் முதல்-மந்திரி தேவேந்திர பட்னாவிஸ், துணை முதல்-மந்திரிகள் ஏக்நாத் ஷிண்டே, அஜித்பவார் ஆகியோருக்கு எம்.எல்.ஏ.வாக பதவிப்பிரமாணம் செய்து வைத்தார்.

நாக்பூர் தென்மேற்கு சட்டமன்ற தொகுதியை பிரதிநிதித்துவப்படுத்தும் முதல்–மந்திரி தேவேந்திர பட்னாவிஸ் 6-வது முறையாக சட்டசபையில் உறுப்பினராக பதவியேற்றார். அவர் பதவியேற்றபோது பா.ஜனதா உள்ளிட்ட ஆளுங்கட்சி உறுப்பினர்கள் மேஜையை தட்டி ஆரவாரம் செய்தனர். சில உறுப்பினர்கள் ஜெய் ஸ்ரீராம், ஜெய் பவானி, ஜெய் சிவாஜி என முழக்கமிட்டனர். இதைத்தொடர்ந்து எம்.எல்.ஏ.க்கள் பலர் பதவி ஏற்றனர்.

### மக்கள் மனதில் சந்தேகம்

ஆனால் சட்டசபை கூட்டத்தின் முதல் நாளான நேற்று எதிர்க்கட்சிகள் கூட்டணியான மகாவிகாஸ் அகாடியை சேர்ந்த எம்.எல்.ஏ.க்கள் பதவி ஏற்க மறுத்துவிட்டனர். தேர்தலில் மின்னணு வாக்குப்பதிவு எந்திரங்களில் முறைகேடு செய்து ஆளும் கட்சியினர் வெற்றிபெற்றதாக கூறி, அதனை கண்டிக்கும் வகையில் அவர்கள் பதவி ஏற்க மறுத்தனர்.

இதுகுறித்து சட்டசபை வளாகத்தில் செய்தியாளர்களிடம் பேசிய உத்தவ் சிவசேனா சட்டமன்றகுழு தலைவர் ஆதித்ய தாக்கரே கூறுகையில், "மாநில அரசுக்கு அறுதி பெரும்பான்மை உண்மையாக கிடைத்திருந்தால் கொண்டாடலாம். ஆனால் அவர்களுக்கு கிடைத்த வெற்றி மக்களால் வழங்கப்பட்ட ஆணையா அல்லது மின்னணு வாக்குப்பதிவு எந்திரம் மற்றும் இந்திய தேர்தல் ஆணையத்தின் உதவியுடன் கிடைத்ததா என்ற கேள்வி எழுந்துள்ளது. மக்கள் மனதில் இருக்கும் சந்தேகங்களை கருத்தில் கொண்டு சட்டசபையின் முதல்நாளில் நாங்கள் பதவி ஏற்றுக்கொள்ளவில்லை.

இவ்வாறு அவர் கூறினார்.

288 தொகுதிகளை கொண்ட சட்டசபைக்கு நடந்த தேர்தலில் ஆளும் கூட்டணி 230 இடங்களில் வெற்றி பெற்றது. எதிர்க்கட்சி கூட்டணிக்கு 46 தொகுதிகளில் மட்டும் வெற்றி கிடைத்தது குறிப்பிடத்தக்கது.

DECCAN CHRONICLE
Dated: 08.12.2024

# MVA protests EVMs, skips oath-taking in Assembly

PRASAD PATIL | DC
MUMBAI, DEC. 7

The Congress, the Shiv Sena (UBT) and the NCP (SP) legislators on Saturday decided not to take the oath as members of the legislative Assembly to protest against what they called irregularities related to electronic voting machines (EVMs). A three-day special session of the Maharashtra Assembly commenced on Saturday to administer oaths to newly elected MLAs.

State Congress chief Nana Patole said, "There is a feeling among the people that this government was not elected on their votes. Respecting public opinion, members of the MVA have decided not to take their oath today."

The legislators of the three parties were present in the House as the day's proceedings began at 11 am. However, they staged a walkout after chief minister Devendra Fandavis and two deputy CMs Eknath Shinde and Ajit Pawar took oaths.

A legislator does not become a member of the House without taking an oath of secrecy. The swearing-in of the MLAs will take place over two days – on Saturday and Sunday – and it is expected that the MLAs who abstained from Saturday's proceedings will be administered the oath on Sunday. Interestingly, the two MLAs of the Samajwadi Party, which is also part of the MVA, did not boycott the proceedings and took their oaths.

D.T. NEXT Dated: 08.12.2024

# Opposition MLAs skip oath on Day One over EVM misuse allegations

**MUMBAI: Two days after being sworn in as Maharashtra Chief Minister, Devendra Fadnavis on Saturday took oath as an MLA along with deputy CMs Eknath Shinde and Ajit Pawar, while the opposition MVA boycotted the ceremony alleging EVM misuse.**

The opposition members refused to take oath as members of the of the newly-constituted legislative assembly on the first day of the three-day special session of the House, as they raised question marks over the ruling Mahayuti alliance's massive mandate and the trustworthiness of the electronic voting machines (EVMs). Fadnavis, Shinde and Pawar were administered the oath of office as MLAs by pro-tem assembly speaker Kalidas Kolambkar soon after the proceedings began at 11 am.

Before them, Chainsukh Sancheti, Jaykumar Rawal (both BJP), Manikrao Kokate (NCP) and Ashish Jaiswal (Shiv Sena) took oath as they have been appointed as members of the pro-tem speaker's panel by Governor CP Radhakrishnan.

They were the first to take oath as members of the House on Saturday.